வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3873/அ1/2023 நாள். .10.2023

பொருள்: தேர்தல் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2024 வேலூர் மாவட்டம் 01.01.2024 ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளுதல் பதிவு பெற்ற மையங்கள் (Designated Locations) - பள்ளிகளில் அமைத்தல் தலைமை ஆசிரியர்கள் அந்தந்த பள்ளிகளில் பணியிலிருக்க அறிவுறுத்தல் . தொடர்பாக

பார்வை: 1) தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மை செயலாளர், பொது (தேர்தல்கள் I ) துறை அவர்களின் கடிதம் எண்.5898/ Ele-I/2023 -1. நாள்.25.09.2023

2) தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மைச் செயலாளர், பொது (தேர்தல்கள்-I) துறை அவர்களின் கடிதம் எண்.4700/Ele-I/2023 4 நாள். 27.09.2023

-----

வேலூர்மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளிலும் 01.01.2024 ஐ தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள், சிறப்பு சுருக்கத்திருத்தம் 2024 ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக வேலூர் மாவட்டத்தில்அமைந்துள்ள அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்களிலும் 27.10.2023 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, 27.10.2023 முதல் 09.12.2023 வரைபெயர் சேர்க்க படிவம்-6, பெயர் நீக்க படிவம் 7, வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்ய, சட்டமன்ற தொகுதிக்கள் / ஒரு தொகுதியிலிருந்து மற்றொரு சட்டமன்ற தொகுதிக்கு இடமாற்றம் செய்ய படிவம் 8, வெளிநாடுவொழ்இந்தியர்களுக்கு படிவம் 6 A. (வாக்காளர் பதிவுஅலுவலர் அலுவலகத்தில் ) வாக்காளர் விவரங்களுடன் ஆதார் எண் இணைக்க படிவம் 6 B. ஆகிய படிவங்களை அனைத்து அரசு அலுவலக வேலை நாட்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள ஏதுவாக வாக்குச்சாவடி அமைவிடங்களில் (Designated Location)அந்தந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் / உதவி தலைமை ஆசிரியரை மைய அலுவலர்களாக நியமனம் செய்ய தேர்தல்ஆணையம் உத்திவிட்டுள்ளது.

அதன்படி இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களில் பள்ளிகளில் தலைமைஆசிரியர்கள் / உதவி தலைமை ஆசிரியர்கள், அரசு அலுவலகமாக இருக்கும்பட்சத்தில் கண்காணிப்பாளர்கள் ஆகியோரை வாக்குச்சாவடி மைய அலுவலர்களாக (DLOs ) பணி நியமனம் செய்து அந்தந்த வாக்காளர் பதிவு அலுவலர்மூலமாக ஏற்கனவே ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நியமனம் செய்யப்பட்டுள்ள மைய அலுவலர்கள் அவர்களுக்கான அமைவிடங்களில் சிறப்பு சுருக்கத் திருத்தக் காலங்களான 27.10.2023 முதல் 09.12.2023 வரையிலான காலத்தில் அலுவலக வேலை நாட்களில் அந்தந்த மையங்களில் காலை 10.00மணி முதல் மாலை 05.00 மணி வரை பாடவேளை தவிர்த்து மற்ற நேரங்களில் ( Break Times ) படிவங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், மேலும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள சிறப்பு முகாம் நாட்களான (04.11.2023 ( சனி), 05.11.2023 (ஞாயிறு) 18.11.2023 (சனி)மற்றும் 19.11.2023 (ஞாயிறு) ஆகிய நாட்களில் காலை 10.00 முதல் மாலை 05.00 வரைஆஜரில்இருந்து வாக்காளர் பட்டியலில் சேர்க்க / நீக்க / திருத்த / முகவரி மாற்றம் ஆக்யவற்றுக்காக வரப்பெறும் 6, 6A (வாக்காளர் பதிவுஅலுவலர்அலுவலகம்) 7 மற்றும் 8 படிவங்களையும் மேலும் ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள வாக்களர்களில் மேற்படி வாக்காளர் விவரங்களுடன் ஆதார்எண் இணைக்காமலிருக்கும் நபர்களிடமிருந்து சுயவிருப்பத்தின் பேரில் படிவம் 6 B ஆகியவற்றை பெறும் பணியினை மேற்கொள்ள வேண்டும். அனைத்து தலைமை ஆசிரியர் / உதவி தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மையத்திலிருந்து இதுதொடர்பாகஎவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் மாணவர்களுக்கு கல்விபோதிக்கும் பணிபாதிக்காத வகையில் இப்பணியை செவ்வனே செய்து முடிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வாக்குச் சாவடி அமைவிடங்களில் உள்ள அனைத்து பள்ளித் தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

31/10/23

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

26
31/10/23

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   (இடைநிலை / தொடக்க நிலை / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
   வேலூர்மாவட்டம்.